(4) அறிக்கை அளித்தல்

பொதுக் கணக்காய்வுக் குழுவின் 1969-70-ம் ஆண்டுக்கான சாட்டிய, அனுமதித்த நிதி ஒதுக்கீடுகளுக்'ம் மேற்பட்ட தொகை குறித்த அறிக்கை.

திரு. சௌடி எஸ். சுந்தர பாரதி: தலைவர் அவர்களே, பொதுக் கணக்காய்வுக் குழுவின் 1969-70-ம் ஆண்டுக்கான சாட்டிய, அனுமதித்த நிதி ஒதுக்கீடுகளுக்கும் மேற்பட்ட தொகை குறித்த மேற்படி குழுவின் அறிக்கையை அளிக்கிறேன்.

(5) அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) 1973-ம் ஆண்டு, நிலவுடைமைகள் (நிறைவேற்று நடவடிக்கைகளை நிறுத்தி வைத்தல்) (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பேரவைத் தலைவர் அவர்களே, 1973-ம் ஆண்டு, நிலவுடைமைகள் (நிறைவேற்று நடவடிக்கைகளை நிறுத்தி வைத்தல்) (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அறிமுகம் செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(ஆ) 1973-ம் ஆண்டு, சிவில் வழக்குகள் நடைமுறை (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு

THE HON. THIRU S. MADHAVAN: Sir, I move—

"That leave be granted to introduce the Code of Civil Procedure (Tamil Nadu Amendment) Bill, 1973".